**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.88/2022**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சுரேஷ்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **வேணுகோபால்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(17.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் பெருங்குடி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு.ராஜபாண்டி எனப்வரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். அவர்கள் பணி மாறுதலாகி வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 29.04.2021ம் தேதி 12.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் அவர்கள் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது ஆறுமுகம் மனைவி தங்கபொன்னு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 118/2021 பிரிவுகள் 294(பி), 323, 324,341, 506(2) இதச மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் படி வழக்கு பதிவு செய்து புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை**

**அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கு கொண்டு அன்றைய தினமே 13.00 மணிக்கு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் வெற்றிசெல்வி மற்றும் வேல்சாமி ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி 29.04.2021ம் தேதி 15.00 மணிக்கு பெருங்குடி சுடுகாடு அருகில் எதிரியை கைது செய்து அவரிடம் வாக்குமூலம் பெற்று 16.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து பாராவசம் ஒப்படைத்து பின்பு எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324,341, 506(2) இதச மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார் செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.